
# நினைவுமலர்

11.01.2023



அமரர்

# சின்னையா செல்லம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்,

புகழேந்தி நகர் - யோகபுரம் மல்லாவியை,

வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. சின்னையா செல்லம்மா

அவர்களின்

இறைபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**11.01.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவியாய்
ஒளிவிளக்காய் விளங்கி
எம்மையெல்லாம் வழி நடாத்தி
பண்பின் சிகரமாய், அமைதியின்
வடிவமாய் அன்பின் திருவுருவாய்
அனைவருக்கும் எளிமையாய்
நல் வழிகாட்டியாய் இவ்வுலகில் வாழ்ந்து
இறைவனடி சேர்ந்து விட்ட
எம் அன்புத் தெய்வத்திற்கு
**இந்நூல் சமர்ப்பணம்**

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



## அமரர் சின்னையா செல்லம்மா

மண்ணில்
10.08.1934

விண்ணில்
12.12.2022

### திதிவெண்பா

பார் போற்றும் கார்த்திகைத் தேய்பிறைச் சதுர்த்தியிலே
ஊர் போற்ற எமைவாழ வைத்த எம் செல்லம்மா
சீரோடு வாழ்ந்த இவ்வுலகினை விட்டகன்று
வேரோடு விடைபெற்றாய் விண்ணுலகில் வாழ்வதற்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

## தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆர் ஆர் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன்அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசை அனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.


## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடும் முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்கும் முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமானபொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னையா செல்லம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறு



ஈழத்திருநாட்டில் வீரத்திற்கு பெயர் பெற்ற வடமராட்சி மண்ணில் நெற் களஞ்சியங்கள் சூழக் கோயில்களுடன் அமைந்த கரவெட்டியில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்தவர்கள் அமரர்களான வல்லிபுரம் இலட்சுமி தம்பதியினர். இவர்களுக்கு ஐப்பசி 08ஆம் திகதி 1934 ஆம் ஆண்டு அன்று மூத்த மகளாகப் பிறந்தவரே செல்லம்மா என்பவராவர். இவரைத் தொடர்ந்து கனகம்மா என்பவரும் இராசம்மா என்பவரும் இவர்களுக்கு மகள்களாகப் பிறந்தனர். எல்லோரைப் போலவே தமது மூன்று மகள்களுடன் சேர்ந்து ஐவருமாக அன்பாகவும் மகிழ்வாகவும் வசித்து வந்த காலத்தில் இவர்களின் வாழ்க்கையிலும் இயற்கையின் விளையாட்டினால் வாழ்க்கைப் பயணம் திசைமாறத் தொடங்கியது. இவர்களின் தாய் பின்னர் தந்தை என இருவருமே சுகயீனம் காரணமாக இயற்கையெய்த சிறுவயதிலேயே தனது குடும்பத்தைப் பாரமெடுத்துக் கொண்ட இவர், தங்கைமாரை சிறு வயது முதலே வளர்த்து வந்தார். அவ்வாறு இருக்கின்ற காலத்தில் அதே ஊரைச் சேர்ந்த அமரர்களான குமாரு சின்னம்மா தம்பதிகளின் இளைய மகனான சின்னையா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

சின்னையா மற்றும் செல்லம்மா இருவரும் சேர்ந்து செல்லம்மாவின் இரு தங்கைமாருக்கும் திருமணமும் செய்து வைத்தனர். இவ்வாறு இருக்கின்ற காலத்தில் இவர்களுக்கு மூத்ததாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அற்புதமலர் (சின்னமணி) என்று பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தாலும் தனது மூத்த மகளை மூத்தவள் என்றே இறுதிநாள்வரை அழைத்தார். மேலும் அடுத்ததாகப் பிறந்த பெண் பிள்ளைக்கு மனோன்மணி என்றும், அவருக்குப் பின் பிறந்த பெண் பிள்ளைக்கு மனோரஞ்சிதமணி என்றும் பெயர் வைத்தனர். மூன்று மகள்களும் பிறந்திருந்த நேரத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பின் வவுனிக்குள குடியேற்றத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட இவர்கள் அங்கு சென்று 1959 ஆம் ஆண்டு முதல் புகழேந்திநகர், யோகபுரம், மல்லாவி, என்னும் ஊரிலே மகிழ்வாக வாழ்ந்து வந்தனர்.

சின்னையா செல்லம்மா ஆகியோருக்கு மூன்று பெண் பிள்ளைகளின் பின்னர் ஒரு ஆண் குழந்தை பிறந்தது அதற்கு மகாதேவன் எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்த காலத்தில் நான்கு வயது ஆனபோது அக்குழந்தை நோய்வாய்ப்பட்டது. ஆயினும் அக்காலத்தில் வன்னியில் முறையான சிகிச்சைகள் இல்லாததன் காரணமாக அந்தக் குழந்தை நான்கு வயதில் அமரத்துவம் அடைந்தது. அமரர் செல்லம்மா அவர்களுக்கு அந்த மகனின் நினைவுகள் என்றும் நிழலாடியது. மகாதேவன் பாடியதாக, கத்தியும் வாளும்........ என்ற பாடலை தன்னுடைய இறுதிக் காலம் வரை செல்லம்மா அவர்கள் உச்சரித்து வந்தார். அதன் பின்னர் பிறந்த பெண் பிள்ளைக்கு சத்தியதேவி எனப் பெயர் வைத்தனர். நீண்ட காலம் ஆண் குழந்தை இல்லை என்கிற கவலை தீர, பிறந்த பிள்ளைகள் என்பதால் அடுத்தடுத்த ஆண் குழந்தைகளுக்கு கடவுள்களின் பெயராக கந்தசாமி மற்றும் சிவானந்தம் என இருவருக்கும் பெயர் சூட்டினர். அதன் பின்னர் பிறந்த பெண் குழந்தைகளுக்கு முறையே புஷ்பமலர் என்றும், நிர்மலாதேவி என்றும் பெயர் வைத்து மகிழ்ந்தனர். இறுதியாகப் பிறந்த ஆண் குழந்தைக்கு சூரியகுமார் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

அமரர் செல்லம்மா அவர்கள் தனது பிள்ளைகளை மட்டுமல்லாது ஏனைய பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போலப் பார்க்கின்ற நற்பண்பு கொண்டவர் என்பதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள் மட்டுமல்லாது ஊர்மக்கள் அனைவருடனும் அன்புடனும், மரியாதையுடனும் பழகும் தன்மை கொண்டவர் என்பதும் பெரும்பாலானவர்களுக்குத் தெரியும். தனது கடைசித் தங்கையான இராசம்மாவின் மகன் தவசங்கர் பிறந்ததும் அவர் நோய்வாய்ப்பட்டு இறந்து போகவே தனது தங்கையின் இளைய மகனை தன்னுடன் அழைத்துவந்த செல்லம்மா தனது பிள்ளை போல் பாசத்தைக் காட்டி வளர்த்து வந்தார். அவரை மட்டுமல்லாது ஏனைய பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என எல்லோரையும் மிகவும் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்த பெருமாட்டி இவராவார்.

கணவனின் உறுதுணை இருந்தாலும் கூட தனது பிள்ளைகளைக் கல்வியில் சிறந்தவர்களாக ஆக்க வேண்டும் என்கின்ற மன வைராக்கியம் செல்லம்மா அவர்களுக்கு நிறையவே இருந்தது, இதன் காரணமாக அனைத்துப் பிள்ளைகளுக்கும் முறையான கல்வி கொடுத்து வளர்த்து வந்தார். குடும்ப வறுமை காரணமாக முதல் நான்கு பிள்ளைகளுக்கும் ஓரளவு கல்வி புகட்டியிருந்தாலும் கூட, கடைசி ஐந்து பிள்ளைகளும் உயர்தரத்திற்கு மேல் கல்வி கற்க வைத்தார். அது மட்டுமல்லாது ஐவரும் அரசாங்க வேலை செய்யுமளவிற்கு உயர்த்திவிட்டார்.

**"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"**

என்ற வள்ளுவனின் வாக்கினை மெய்யாக்கி அதன் மூலம் மகிழ்வு கண்ட ஓர் சிறந்த தாயாக அம்மையார் திகழ்ந்துள்ளார். இவரின் பிள்ளைகளில் மூவர் வெளிநாட்டிலும் நல்ல வேலை மட்டுமல்லாது நல்ல நிலையில் இருப்பதும், கடைசி மகள் முன்பள்ளி இணைப்பாளராகத் திகழ்கின்றமையும், கடைசி மகன் இலங்கையின் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ஆம் ஆண்டு கணவன் இறந்ததன் பின்னரும் கூட தனது பிள்ளைகளை நல்ல நிலையில் வாழ வைப்பதற்காக அமரர் செல்லம்மா அவர்கள் தன்னாலான எல்லா வகையான முயற்சிகளையும் தன்னுடைய இறுதி காலம் வரை செய்து கொண்டே இருந்தார்கள். இவ்வாறாகத் தனது வாழ் நாள் முழுவதையும் தனது குடும்பத்திற்கு, பிள்ளைகளுக்கு, பேரக்குழந்தைகளுக்கு, பூட்டக்குழந்தைகளுக்குஎன்றுவாழ்ந்தஅமரர்செல்லம்மா அவர்கள் தனது 88 வயது வரை முதுமைக்கு உரித்தான சிறு சிறு நோய்களுடன் மட்டும் தனது இல்வாழ்வினை வாழ்ந்த அவரின் உடலை விட்டு 12.12.2022 அன்று உயிர் பிரிந்தது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."**

என்பதற்கிணங்க இதுவரை காலமும் வையகத்துள் நல்வாழ்வு வாழ்ந்து அனைவரையும் வழிநடாத்திய அமரர் செல்லம்மா அவர்கள் விண்ணுலகில் தெய்வமாக இருந்து அனைவரையும் நல்வழி நடத்துவார் என்பதில் ஐயமில்லை.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் உள்ளக்குமுறல்

அம்மா நீ எங்கே?
எங்கள் அம்மா என்ற அரும் பொக்கிஷமே!
அமரம் எய்திவிட்ட எம் உயிர்த் தாயே!
இயற்கை கொடுத்ததோ எம் அன்னைக்கு முதுமை
முதுமை கொடுத்ததோ எம் தாயின் உயிருக்கு முடிவை

தாய்மை உறவது உலகத்தின் முதன்மை
எம் தாயே நீயே -எம்
முதன்மைக்குள் முதன்மை
அன்பும் கருணையும் கொண்ட எம்தாயே -பெரும்
யாகம் செய்தெமை வளர்த்தாயே தாயே
உன் பிரிவுத்துயரது வாட்டுது அம்மா -இனி
எப்போ உன்னை நாம் காண்போம் அம்மா?

பிள்ளைகள் பத்து பெற்ற எம் தாயே
நாலு வயதான மூத்த மகனை நீ இழந்து
ஒன்பது பிள்ளைகள் எமைச் சுமந்தேகி
பெறாமகனான தவசங்கரையும் தாங்கி
எமை உருவாக்க நீ செய்த தவங்கள்
எதை நாம் மறப்போம் எம்முயிர்த் தாயே!

ஆற்றலும் அன்பும் கொண்டிருந்தாலும்
மதுவிலும் நாட்டம் கொண்ட எம் தந்தை
சுமைகளும் தாங்கி குடும்பத்தை சுமந்த -உன்
ஆற்றலை நாங்கள் வியக்கின்றோம் அம்மா

ஊரோடும் உறவோடும் நீ கொண்ட பாசம் -நீ
போனபின்னாலும் பேசுபொருள் அம்மா -நீ
வாழ்ந்த வாழ்வது பாடமாய் எங்கள்
சந்ததி வாழ்ந்திட வழிசெய்யும் அம்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா இனி உன்னை என்று நாம் காண்போம்
மறைவாகிப் போக வெறும் உருவில்லை (அம்மா)
எங்கள் உயிரோடு என்றும் உயிர் வாழ்வாய் அம்மா
எமக்குள்ளே நின்று நீ எமையாள்வாய் அம்மா

இறை நிலையை எய்திவிட்ட எங்களுயிர்த் தாயே
இறைவனை நாம் தொழுகின்றோம் உன் சாந்தி வேண்டி
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி தாயே !

*அம்மா உனைப் பற்றி பணிந்து வணங்கும்*
*உன் பிள்ளைகள்*
**அற்புதமலர், மனோன்மணி,**
**மனோரஞ்சிதமணி, சத்தியதேவி,**
**கந்தசாமி, சிவானந்தம்,**
**புஷ்பமலர், நிர்மலாதேவி,**
**சூரியகுமார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் தத்தளிப்பு.


என்னை பெற்ற என் அன்புத்தாயே அம்மா
உன் இறுதிப்பயணத்தில் நான் இல்லையே அம்மா
என் ஆற்றாமை நிலையிருந்து எப்படி நான் மீண்டிடுவேன்
அதற்கும் உன்னிடம்தான் ஆறுதல் நான் தேடுகின்றேன்

இளவயதில் திருமணத்தை எந்தனுக்கு செய்துவைத்தீர்
அன்றிருந்து இன்றுவரை வேற்றூரில் வாழ்ந்துவந்தேன்
இன்றுவரை அம்மாவுடன் சேர்ந்து வாழக் கிடைக்கவில்லை
என்னபாவம் நான் செய்தேன் இறுதிக் கிரியையிலும் நானில்லை

நோய் வந்த காரணத்தால் அம்மா உன் ஊர்வலத்தில் நானில்லை
அங்கு வந்து நின்றிருந்தால் துன்பம் கொஞ்சம் குறைந்திருக்கும்
தத்தளித்து வாடுகின்றேன் தாயே உன் பிரிவால் நன்
இப்பொழுதும் ஆறுதலை உன்னிடத்தில் தேடுகின்றேன்

அம்மா உன் இனிய உயிர் இறைவனிடம் சேரட்டும்
உன் ஆன்மா சாந்திபெற இறைவனை நான் தொழுகின்றேன்

அம்மா உன் மூத்த மகள்
**அற்புதமலர் (*சின்னமணி*)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேறாமகனின் வேதனை.

அம்மா நீ
எமையெல்லாம் அவனியிலே வாழவைக்க
மெய்யுடல் வருத்தி மெழுகாய் உருகி நின்றாய்
பள்ளி தனுக்கனுப்பி கல்விதனைக் கற்க வைத்தாய்
பாரினிலே நாங்கள் பேர் சொல்ல வாழவேண்டும் என்றெண்ணி
இரவு பகல் பாராது எமக்காய் நீ உழைத்தாய்
அம்மா
பாவியவன் உன்னுயிரைப் பறித்து விட்டான்
பறித்ததனால் தாயிழந்த கன்றினைப்போல்
தவிக்கின்றோம் பாரினிலே.

அம்மா உன் பேறாமகன்.
**தவசங்கர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் மாண்பேற்றல்

மாமி என்ற நல்விருட்ஷம்
மரணத்தில் வீழ்ந்ததுவோ -எங்கள்
மாமி என்ற நல்விருட்ஷம்
மரணத்தில் வீழ்ந்ததுவோ

வீடு வந்து சேர்ந்த எம்மை
விருப்புடனே வரவேற்று
பெற்ற உங்கள் பிள்ளைகள்போல்
பாசமுடன் கொண்டாடி
பாசம் அன்பு பரிவுடனே
எமை அணைத்த பெரும் தாயே
கலானவன் செயலாலே மாமி -உமை
காணும் நிலை இழந்தோமே!

ஆலமரம் போலவேதான் -எங்கள்
மாமி உங்கள் வாழ்வு அது
வாழுகின்ற காலமெல்லாம்
ஓய்வு இன்றி உழைத்த உங்கள்
வாழ்வு ஒரு பா டமென்று
சாற்றுகின்றோம் பெரும் சான்று

கண்டு சில நாட்களிலும்
தொலைபேசி அழைப்பெடுத்தால்
எப்ப உமைக் காண்பேன் என்று
ஏக்கமுடன் கேட்கும் மாமி !!!!!!!
இனி எப்ப உமை காண்போம் நாம் ?

எங்கள் நேசமுள்ள மாமியாரே
நெடுந்துயில்தான் கொண்டீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசிவன் பாதமதில்
நிறைசாந்தி பெற்றிடுங்கள்
வேண்டுகின்றோம் மாமி உங்கள்
ஆத்ம சாந்தி வேண்டி நாங்கள்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

மாமி உங்கள்
பாசமுள்ள மருமக்கள்.
**கணேசன், வள்ளியம்மை.**
**உதயசீலி, அரசரட்டினம்.**
**சண்முகலிங்கம். சுஜிகலா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன் பேத்தி ஆற்றாமை

அம்மம்மா நீங்கள் எங்கே போனீர்கள் ?
அப்பாச்சி எம்மைவிட்டு எங்குதான் சென்றீர்கள்?

நாம் பிறந்த போதினிலே அள்ளி எமை அணைத்து நீங்கள்
ஆளாக்கி வளர்த்த கதை அப்பப்போ அறிந்தோம் நாங்கள்
தொப்பிள் கொடி அறுத்தபின்பு பெற்றதாய் இளைப்பாறித் தேறும்வரை
உங்கள் தேற்றுகையில் தேறித்தான் நாம் வளர்ந்து வந்தோமாமே-
அப்போ
பேரன் பேத்தி எங்களுக்கும் தாயாக உரமளித்த தாயேதான்
அம்மம்மா அப்பாச்சி

இருபத்தெட்டு பேரன் பேத்தி எங்களை ஆசையாய் அள்ளிக் கொஞ்சி
வாழ்த்தி மகிழ்ந்த அம்மம்மா அப்பாச்சி எம்மை விட்டு எங்கே
போனீர்கள்
கவலையாய் இருக்கிறது அம்மம்மா
அப்பாச்சி உங்களை காண இனி முடியாதா?

இறைவனிடம் சென்ற நீங்கள்
வாழ்த்து எமக்கு தருவீர்கள்
நல்ல பிள்ளையாக நாங்கள்
நல் வாழ்வு வாழ்ந்திடுவோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உங்கள் பாசம் நிறைந்த
பேரன்மார் பேத்திமார்.
**கலாநிதி, கௌரிநிதி, சுகந்தநிதி, தமிழினி, செந்தூர்ச்செல்வி,**
**சோபனா, தஜனி, ஜசிந்தா, அமரர் பர்மிலா, சுஜிதா, சரண்யா, சுஜீவன்,**
**டினேஷ், நிஷானி, நிதர்ஷன், மிதுஷன், மிதுனா,**
**பார்த்தன், ஆரபி, யுஜிதா, சஜீபன், திவ்யா, சர்மிலன், ஜெனார்த்தனன், மிதுசன்,**
**இசைவாணன், கவிவாணன், எழில்வாணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டன் பூட்டிகள் மனப்பதிவு

எம்மை அள்ளி முத்தமிடும் சிவந்த நற் கிளவியரே
சந்ததிகள் பெருக்கி நின்ற நாலாம் தலைமுறையே
ஓரிரண்டு ஆண்டுகள்தான் இன்னும் இருந்திருந்தால்
ஐந்தாம் தலைமுறையை கண்டிருப்பீர் கொப் பாட்டியாகி

ஆல மரமதுபோல் விழுதெறிந்து நின்ற பூட்டி
காலம் வந்ததென்று கதை முடித்துச் சென்றியளோ
கிளையின் விழுதுகளாய் நாங்களெல்லாம் இருக்கின்றோம்
வாழும் சந்ததிகள் பேசும் உங்கள் ஆளுமையை

பூட்டி உங்கள் பயணமதை வழியனுப்பி வைக்கின்றோம்
ஆண்டவனின் சந்நிதியில் அமைதியுடன் உறங்குங்கள்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உங்கள் பாசம் மறவாத உங்கள் அன்பு
பூட்டன் பூட்டிகள்.
காயத்ரி, ஜஸ்மின், கரிஷ்,
றொசான், ஜெசிக்கா, மிதுசன், சுஜர்தன்,
தனுஜன், ஆருஜன், அபிஷா,
நேமியா, விசாகன், தமீரா, கிஷானா,
சஹானா, நிதுஷா, ஜதுசன்,
அஸ்வினி, அதிஸ்கா, டனுஜன்,
பவிசன், பர்மியன், ஆருத்ரன்,
ஆருக்க்ஷன், அகானா, மானுஷா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்கள்

தோடுடைய செவியன்விடை
யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்
தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய
பெம்மானிவ னன்றே.

சொற்றுணை வேதியன்சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடிபொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர்கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலந் தான் உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுள்ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

நாகந்தான் கயிறாக நளிர்வரை யதற்குமத் தாகப்
பாகந் தேவரொ டசுரர் படுகட லளறெழக் கடைய
வேக நஞ்செழ ஆங்கே வெருவொடு மிரிந்தெங்கு மோட
ஆகந் தன்னில்வைத் தமிர்த மாக்குவித் தான்மறைக் காடே.

அசைந்தவன் காண் நடமாடிப் பாடல்பேணி
அழல்வண்ணத்தில் அடியுமுடியுந்தேடப்
பசைந்தவன் காண் பேய்க்கணங்கள் பரவியேத்தும்
பான்மையன்காண் பரவிநினைந்தெழுவார் தம்பால்
கசிந்தவன்காண் கரியின் உரிபோர்த்தான்றான் காண்
கடல்விடமுண்டு அமரர்க்கு அமுதம்ஈய
இசைந்தவன் காண் எழிலாரும் பொழிலார்கச்சி
ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தானே

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மாறுகண்டின்புற
இன்னம் பாலிக்கும் மாறுகண்டின்புற
இன்னம் பாலிக்கும் மோவிப் பிறவியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கி லுள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தாங்கு மிடமறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.

## திருவாசகங்கள்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பாக்கள்

ஒளிவளர் விளக்கே! உவப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற்சோதியுள்சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

தற்பரம் பொருளே! சசிகண்ட! சிகண்டா!
சாமகண்டா! அண்ட வாணா!
நற்பெரும் பொருளாய்! உரைகலந்து உன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன் என் உள்ளத்து அளவிலா உன்னைத்
தந்தபொன் அம்பலத்து ஆடி,
கற்பமாய் உலகாய் அல்லையா னையைத்
தொண்டனேன் கருதுமா கருதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையிற் சிறுமை பெண்ணோடுஆ ணாய்என்
பிறப்புஇறப்பு அறுத்தபே ரொளியே!
கருமையின் வெளியே! கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே!
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே! அம்பலத்து அமுதே!
ஒருமையிற் பலபுக்கு உருவிநின்றாயைத்
தொண்டனேன் உரைக்குமாறு உரையே.

கோலமே! மேலை வானவர் கோவே!
குணாங்குறி இறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள்
காலகா லா! காம நாசா!
ஆலமே அமுதுண்டு அம்பலம் செம்பொன்
கோயில்கொண்டு ஆடவல் லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே.

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்கு
இளங்கமுகு உளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதனம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள்நீரத் தரளத் திரள்கொள்நித் திலத்த
செம்பொற் சிற்றம்பலக் கூத்த!
பொறையணி நிதம்பப் புலியதள் ஆடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

அடியோமோடும் நின்னோடும் பிரிவு இன்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வல மார்வினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்து உறையும் சுடர் ஆழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பு இலோம் நாங்கள் இராக்கதர் வாழ் இலங்கை
பாழாள் ஆகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து
கூடு மனம் உடையீர்கள் வரம்பு ஒழி வந்து ஒல்லைக் கூடுமினோ
நாடும் நகரமும் நன்கு அறிய நமோ நாராயணாய என்று
பாடு மனம் உடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே

அண்டக் குலத்துக்கு அதிபதி ஆகி அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடிகேசன் தனக்கு
தொண்டக் குலத்தில் உள்ளீர் வந்து அடிதொழுது ஆயிர நாமம் சொல்லிப்
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்.
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அரு மறைச் சிறத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச் சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங் கழல் போற்றி போற்றி

வேதியர் தில்லை மூதூர் வேட் கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்து ஆடும்
நாதனார் கழல்கள் வாழ்தி வழிபடும் நலத்தின் மிக்கார்

நண்ணிய தவச் சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர் தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றி செய்து
எண்ணிய வகையினால் எதிர் கொண்டு ஏத்தினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



காப்பு

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானை
காதலால் கூப்புவார்தம் கை.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக
மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க
யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக்
குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன்
னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங்
கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை
சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாத
பங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் பே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்
செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த
நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்
வெங் காலுமன்பாடி
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந்
தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்
சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந்
தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன
நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட
மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப்
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குஞ் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடு நிமனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ர ர ர ர ர ர ர
ரிவண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரவண வீரா நமோநம

நிபவ சரவண நிறநிற நிறென
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரைங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்

நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து

நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோ தனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க

கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறக் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட

ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப் (2)
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் எனை தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா

தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா திருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தமெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்தால்

பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்

கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் செயல்து அருளுவர்
மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார்

கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு வந்தமு தளித்த


குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!

குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுஉரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்றுப்பதிகம்



மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற்சுண்ணம்



முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்ப விளக்கு திடீரென பிரிந்த செய்தி கேட்ட உடன் ஓடோடி வந்து உதவிகள் புரிந்து ஒத்துழைத்த உறவுகள். மற்றும் அன்னாரின் இறுதிப்பயணத்தில் கண்ணீர் அஞ்சலி பதாதைகள் தொங்க விட்டு, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியும், மலர் வளையம் சாத்தியும், இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டும் தொலைபேசி மூலமும் ஆறுதல் வார்த்தைகள் தெரிவித்த அன்பு நண்பர்கள், உறவுகள், அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இந் நினைவுமலரைச் சிறந்த முறையில் அச்சுருவாக்கம் செய்த கரிகணன் தனியார் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்